முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1508

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**15.11.2023**, புதன்கிழமை

1. பேருலகம் காக்க வந்த அரங்கனே
பிரளயத்தையே தடுக்க வந்த தேசிகனே
வரம் தந்து உலகோரை மாற்ற
வள்ளலாக வாழுகின்ற அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
ஆற்றல்பட சுப்ரமணியர் யானும்
அகிலமதில் சோபகிருது துலை திங்களில் உரைப்பேன்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 29 ம் நாள், 15.11.2023, புதன்கிழமை)
3. உரைக்கவே அரங்கன் மகா சக்தி
உலகமெல்லாம் தர்மமாக நிரம்பி வர
பிழையற சடுதி உலகமாற்றம்
பிரபஞ்சமே வியக்க நடந்தேறும்
4. தேறுமப்பா உன்வழி உலகோர் ஞானப்படை
தெய்வநெறி கலந்த உயர்படையாக
மாறுமப்பா உலகமெல்லாம் ஞானவான்கள் கூட்டமாக
மக்களெல்லாம் அரங்கன் உன்னை நம்பி வர
5. வருகின்ற காலம் கனிந்து வர
வையகத்தில் அற்புதம் நிகழக்கூடும்
தருகின்றேன் உன்வழி மகா சக்தியை
தர்மம் செய்கின்ற அனைத்து தொண்டர்கட்கும்
6. பெருமைபட ஆற்றல் கூட்டி
பிரணவ சக்தி ஆக
ஆகவே உருமாறி அவர்கள் கிளைகள் அனைத்திலும்
ஆற்றலாக ஆறுமுகன் யான் நிரம்பி உள்ளேன்
7. உள்ளபடி உன் நாமஜெபம் சொன்னால் போதும்
உயர்வாக அக்கணமே அங்கு ஆறுமுகன் இறங்கி
வல்லமைகூட்டி அங்கு அவர்களை காத்து வருகின்றேன்
வளர்த்து வருகின்றேன் பேருலகமெங்கும் தர்மத்தை

8. தர்மவான் அரங்கன் உன் தயவாலே
தரணியில் மாற்றம் நிகழக்கூடும்
பெருமைகொண்டு உலகோர் இந்த சூட்சுமம் அறிந்து
பிரணவக்குடில் வந்தால் போதுமப்பா மாற்றம் உடன் நிகழும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–